# *1. கருணைக் குகப்பிரமம்.*

**சு**ருதியின் றிறமான கருமாதி மூன்றினுந்
துகளற்ற சைவதந்த்ரஞ்
சொன்மிக்க சரியாதி நான்கினுங் கடையிற்
றுலக்குசன் மார்க்கமென்னும்
பொருவின்மெய்ஞ் ஞானவத ரொன்றுமே யேழையேன்
புந்திக் கியைந்ததத்திலே
புரையற நடந்தசி பதப்பொலிவை யெய்தாது
புன்செயலி னின்றவெற்குத்
திருவரு ளிலாதத்தை யுறுவதின் றென்றுனது
திவ்வியசமு கத்தைநாடச்
சிந்தைதந் திதுகாறு மாண்டநீ முற்றினுந்
திருவுள முவந்துநெய்தைக்
கருணைகூ ரென்னுட் கலந்தருள வேண்டுமே
கங்குல்பக னீத்தநிலையில்
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 1

**எ**ழுமொரு குணக்கினு மிறங்கொரு குடக்கினு
மிலாதுச்சி தன்னிலொளிசெய்
இனனிற்கி னிழலற்ற நீர்மைபோன் முதனூ
லிரண்டினக டாகநிமிரும்
வழுவில்வே தாந்தசித் தாந்தசம ரசசாத
மார்க்கத்தி னிற்கிலுபய
வாதமுந் தோன்றற் கிலக்கற்ற தீர்வையா
மௌனமது தோன்றுமதுவே
முழுமுதற் பரமான நின்னகண் டாகார
மூலமெய்ஞ் ஞானமெனவே
மொழிசிதா காசதே சோமயா னந்தமாய்
முடிகின்ற வுண்மையுணராக்.

கழுதென்ன வின்னமுஞ் சுலவுகுண மெய்தினுன்
கருணைக்கு மாளாவனோ
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 2

**க**ற்றவர்கள் கற்றபடி யேநடை தராதீன
கருமவா தத்திலாடு
கறங்கெனச் சுலவவுங் கல்லார்க ணல்லநிட்
காமமுற் றுஞ்சிதடற்போற்
சிற்றறிவின் வேதாந்த சித்தாந்த சமரசந்
தேராத புன்மையதனாற்
சிந்தைபுடை கொண்டுநிச் சிந்தைநிலை கூடாது
திரிபுறவு மாடலுன்றன்
கொற்றவா ணைக்குளுள மாயையி னியற்கையோ
கொடுவினைத் தொடர்பின்வலியோ
குற்சித மலச்சீவ சுபாவமோ கற்றுமென்
கொள்கைநன் காகவிலையே
கற்றைச் சடாடவிக் கடவுள்கல் லாலகங்
கைவைத்த ரகசியத்தே
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 3

**பு**ன்மனப் புன்மையே பொதுளுமதி யீனவென்
புத்திக் கியைந்தவாறாப்
புகலவுள வோரத்து விதமார்க்க மொன்றையே
பூர்த்தியுர மென்னுமுடிபாய்
வன்மையொடு கொண்டிச்சை யாற்செய்யும் வழுவெலாம்
வத்துவா மெற்கிலையெனா
வாய்ப்பறை யறைந்துநின் றாலுமம் மட்டிலொர்
மனத்தெளிவு கூடுமதுவும்
இன்மையுற நல்லத்து விதமான வருண்ஞான
மில்லாது முத்தியிலையென்
றேசற விளக்குசித் தாந்தமுங் கற்றுநா
னிழிவாக வென்கண்விளையுங்

கன்மங்க ளுக்குட்கி யல்லலுவ ரமிழ்கிறேன்
காப்பதுனை யன்றியாவர்
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 4

இதுகாறு நீயென் பொருட்டயர்ந் துள்ளசெய
லியாவுநன் குய்த்துநோக்கில்
எப்படியு நானுன் னடித்தொண்ட னென்பதூஉ
மென்கடவு ணீயென்பதூஉம்
விதியாகு மல்லாது பிசியாவ தின்றென்
விவேகசூ னியத்தினந்தும்
வியர்த்தவினை யசுசிகண் டென்னைநீ விடினுநான்
விடுவதின் றமிதப்பொலாச்
சுதனெனினு மன்னருட் டாதைதள வன்மையுந்
தோன்றநடு வுண்டுகொல்லோ
சூரற்கு மைத்திமிர நீக்கவொரு பிரயாசஞ்
சொல்லலா மோவெனாது
கதழ்வோவு மனமாசு நின்னருண்மு னிற்குமோ
கபடொன் றிலாதபெரியோய்
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 5

துடவைமா டாடில்ல மனைமகா ருறவுபொன்
றொழில்குலப் பெருமைமேன்மைத்
தொடர்பாதி யோம்புவிவ காரத்தி லதிமுரண்
டோன்றுநெறி நின்றநானுன்
படர்தகவு வலியாலவ் விவகார நீத்துனது
பதவுத்தி பெறுதலூங்குப்
பவுள்சென வலித்துநிற் கின்றவிக் கானீ
பராமுகம் பண்ணிலுன்றன்
திடவருட் டிறமோது சட்டநன் னீதியுஞ்
செல்லுங்கொ லென்வழக்குந்
தேயுங்கொல் விவகார மோயுங்கொ லையவொரு
திட்டமில் லாதனந்தங்

கடவைக்கு நானிலக் காயினு மளப்பிலுடல்
கண்டாலு நின்னடிமைகாண்
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 6

**உ**யிர்களை யனாதிமல பந்தத்தி னின்றுள
முவந்துவிடு தலைசெய்வதுன்
உரவனுக் கிரகவரு ளுக்கே யுரித்தென்ப
துறுதிநா னுள்ளதடியாப்
பயிலுமிது தாறும்வன் பாசபந் தத்திடர்ப்
படுமென்னை விடுதலைக்காம்
பரமநெறி நேடும் படிக்கிந்த ஞான்றெனுட்
பதிவாய வருள்வல்லபஞ்
சயமுடைப் பூரணந் தாராது மந்தநடை
தருவதால் வலிகுறைந்த
தரமா யிருக்குமோ வலதென்க ணுளமலத்
தளைமட்டு மதிவன்மைசால்
கயமா யிருக்குமோ வுள்ளபடி யோதெனது
காதற் கியைந்தகண்ணே
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 7

**மு**ண்டமுண் டனமுமொண் கீளுடையு மிலகவென்
முன்வந்து சொற்றவொருசொன்
முடிவைநன் குய்த்துணர மூலநா டிச்செயலை
முன்னிடுத லல்லாததாய்த்
துண்டநுதி முதலாய காட்சிகளொ டக்கரஞ்
சொல்லுநெறி யல்லாததாய்ச்
சுகுர்தகன் மம்விரத மூர்த்திதல நீர்நிலைக
டொழறோய்த லில்வாரியாய்
எண்டிசையு மப்பாலு நிறையுமொரு நீர்மையா
யேசிலா மோனமுத்ரை
என்றகை காட்டான தகரால யப்பே
ரிராசியச் சுகமார்க்கமாய்ச்

கண்டேனவ் வணநிலாப் பேதைக்கு நின்னருட்
கலிதோயு மாக்கமுறுமோ
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 8

**யா**ப்பூரி னின்றுனடி நாட்டமெனும் வங்கத்தி
லேயெக்கி யமுதநகர
யாத்திரையை நீப்பெனுஞ் சிந்தகஞ் செய்யிநாள்
யானென வெழும்புராண
மாப்போத மோகாதி கனவிண் டெழீஇயறை
வலிதனக் கஞ்சுதமியேன்
வந்தவதர் சென்றேறு துறைசெல்லி னக்கணும்
வழுத்துமோ காதிசுசன
மூப்பான கோரத்தி னாலல்ல லலைமிக்கு
மோதிமோ டேற்றிநைத்தே
முழுவின்ன றருமாக லாலென்ன புன்கணினி
மூசினும் பின்செலாதுன்
காப்பா லிறங்குதுறை காண்பதே சுகமிக்
கருத்தின் படிக்கருள்செயாய்
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 9

**தோ**லென்பு நெய்த்தோர் புலான்மச்சை யெசமாய
தொக்கது தணந்தபின்னர்த்
தொல்லவா சிச்சூரின் வன்சிலதர் நோக்கியட
துப்பிலி சுசீலமில்லி
ஞாலமிசை யல்லவைச் சுமையா யிருந்துளோய்
ஞானப் படிற்றுநடையோய்
நன்னிலை யிலாதோ யெனச்சுளித் திருகவுளு
நையவெனை யறையினஞ்ஞான்
றோலமிடி னும்வாயி லறைவரெனு முருமுற்
றுளுக்குளே யுலைவதல்லால்
உத்தரம் பரவிவிடு தலைகொளற் கியலுமோ
வுன்றஞ்ச முன்றஞ்சமே

காலனதி காரங் கடந்தவிரு மருணகிரி
கண்டவொரு பெரியபொருளே
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே. 10